

திருவிடந்தையில் நடைபெற்ற வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் கலந்துகொண்டு வீடு திரும்பும் வழியில் விபத்து ஏற்பட்டு சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் குன்றத்தூர் மத்திய ஒன்றியம், வரதராஜபுரம் ஊராட்சியைச் சேர்ந்த வாக்குச்சாவடி பணிக்குழு உறுப்பினர் (BLC) கிருஷ்ணராஜ் அவர்களை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் நேரில் சந்தித்து மருத்துவர்களிடம் உடல் நலம் குறித்து கேட்டறிந்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் இ.மணி, வரதராஜபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் மு.செல்வமணி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு, சிந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மடிக்கணினிகள் வழங்கினார். உடன் திருவேற்காடு நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி, கல்லூரி தாளாளர் துஷ்யந்த் மெகரா, முதல்வர் பிரகலாதன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர், ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், கல்லூரி நிர்வாகிகள் இருந்தனர்.

### மாதிரி கிராம மேம்பாட்டு திட்டத்திற்கு

# ஒன்றிய அரசு போதிய நிதியுதவி அளிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

## மக்களவையில் – எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, பிப். 13-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 10 பிப்ரவரி 2026 அன்று மக்களவையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிரி கிராம மேம்பாட்டு திட்டத்திற்கு, ஒன்றிய அரசு போதுமான நிதியுதவி அளித்து வருகிறதா? என்றும், கடந்த ஐந்தாண்டுகளில், தமிழ் நாட்டிற்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது? என்றும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதா? என்றும், எவ்வளவு கிராமங்களில், மாதிரி கிராம மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் மாண்புமிகு கிராமப்புற வளர்ச்சித் துறை இணைய மைச்சர் திரு கமலேஷ் பாஸ்வான் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் கிராமப்புற வளர்ச்சித் துறை இணைய மைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை 1440 கிராம பஞ்சாயத்துகளில் 35 மாநிலங்களில் மாதிரி கிராம மேம்பாடு திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வளர்ச்சிக்கு நிதியுதவி லிருந்தும், சட்டசபை உறுப்பினர் வளர்ச்சி நிதியுதவிலிருந்தும் இத்திட்டத்தின் செலவுகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது என்றும், சட்டசபை உறுப்பினர்களின் வளர்ச்சி நிதி அந்தந்த மாநில அரசுகளால் வழங்கப்படுகிறது என்றும், தமிழ்நாட்டில் 158 மாதிரி கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டுள்ளது என்றும் ஒன்றிய அரசின் மாண்புமிகு கிராமப்புற வளர்ச்சித் துறை இணையமைச்சர் திரு கமலேஷ் பாஸ்வான் அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### தர்மபுரி கிழக்கு மாவட்டத்தில்

# “என் ஊர் என் கனவு திட்டம்” கலந்தாய்வுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. பேச்சு!



தர்மபுரி, பிப். 13-

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அதியன் கூட்டரங்கில் தருமபுரி திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி மற்றும் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் ஆகியோர் “என் ஊர் என் கனவு திட்டம்” மாவட்ட அளவிலான கலந்தாய்வு கூட்டத்தினை துவக்கி வைத்து பொதுமக்களுடன் கலந்துரையாடி,தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு துறைகளில் சாதித்த சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து, கேடயங்களை வழங்கி மரியாதை செய்தனர்.

இந்த கலந்தாய்வு கூட்டத்தில் ஆ.மணி எம்.பி. பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் பொது மக்களின் நலனுக்காக பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி தமிழ் நாட்டினை முன் மாதிரி மாநிலமாக உயர்த்தி உள்ளார்.”என் ஊர் என் கனவு” என்ற திட்டமானது, 2030-க்குள் தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தையும் இலக்கு வைத்து,வளர்ச்சிக்கான தொலைநோக்கு அறிக்கையினை தயாரிக்க தமிழ்நாடு அரசின் ஒரு முக்கிய முன்முயற்சியாகும். மாவட்ட வளர்ச்சிற்காக திட்டமிடுவதற்காக எதிர்கால தொலைநோக்கு பார்வையோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி உள்ளார்.இத்திட்டத்தினை செயல் வடிவத்தில் கொண்டு வருவதற்காக பொது மக்களிடமிருந்து கருத்துக்கள் கேட்பதற்காகவே இந்த கலந்தாய்வுக்கூட்டம் நடத்தப்படுகிறது.இந்த திட்டம் ஊரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும்,சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டுள்ளது. தங்கள் சொந்த ஊரில் உள்ள பள்ளிகள், மருத்துவமனைகள்,நூலகங்கள் மற்றும் பொது இடங்களை மேம்படுத்த நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்க இத்திட்டம் வழிவகை செய்யும்.

அனைத்து தரப்பு மக்களின் வாழ்கையிலும் அக்கறை கொண்டுள்ள நமது தமிழ்நாடு முதலமைச்சர் தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிக்கென பல தொலைநோக்கு திட்டங்களை கொடுத்துள்ளார்.உதாரணமாக அரசில் பல துறைகள் இருந்த போதிலும் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து,அதிக நிதி ஒதுக்கி கல்வி துறையை தன் இரு கண்களாக பாவித்து செயல்பட்டதால் கடந்த 2021 ஆண்டில் நாட்டில் தேர்ச்சி விகிதத்தில் 27 வது இடத்தில் இருந்த தருமபுரி மாவட்டம் இன்று 2026 ஆண்டில் 7 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.அதுமட்டுமல்ல பள்ளியில் இருந்தே அவர்களின் ஆரோக்கியம் மேம்பட காலை சிற்றுண்டி,ஆரோக்கியம் மேம்பட HPV தடுப்பூசி என கல்வியில் சிறந்த நாடாக தமிழ்நாட்டை உருவாக்கியுள்ளார் நமது முதலமைச்சர். மேலும் ஒவ்வொரு ஊருக்கும் முன்னேற்றம் தரும் வகையில் பல நல்ல திட்டங்களை திராவிட மாடல் அரசு செயல்படுத்தி உள்ளது. தொழில்வளர்ச்சி மற்றும் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிடும் வகையில் விரைவில் தருமபுரி மாவட்டத்தில் சிப்காட்டினை நமது முதலமைச்சர் துவக்கி வைக்க உள்ளார்.


இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,ஓய்வு பெற்ற ஆட்சியர் அண்ணாமலை,திரைப்பட நடிகர் பென்ஜமின், பாடகர் மூக்குத்தி முருகன்,பயிற்சி துணை ஆட்சியர் செல்வி.சௌமியா குமார், மாநில விவசாய சங்க தலைவர் சின்னசாமி,திமுக மாநில நிர்வாகி சூடப்பட்டி.சுப்ரமணி, மாவட்ட நிர்வாகி சி.கிருஷ்ண குமார், நகர செயலாளர் முல்லை.ரவி,ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன்,திமுக ஐ.டி.விங் அண்ணாமலை,தமிழழகன்,மற்றும் அனைத்து சங்க பிரதிநிதிகள், உற்பத்தியாளர்கள், வியாபாரிகள்,தொண்டு நிறுவன நிர்வாகிகள், வணிகர்கள், துறைசார் வல்லுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள்,சமூக அக்கறை கொண்ட தனிநபர்கள்,தொழிலதிபர்கள்,இளைஞர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.மலையாளம்

பிப்ரவரி 13 (2000)



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருச்சி, மணப்பாறை நகரக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பொறுப்புகள் வகித்தவர்.

தியாகேசர் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவராக பொறுப்பு வகித்து, தொழிலாளர் நலத்திற்கென பாடுபட்டவர்.

மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கு நிதி வழங்க மறுப்பதா?

## திட்டத்தை முழுவதுமாக முடக்க ஒன்றிய அரசு செய்யும் சதி அம்பலம் – கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!



புதுடெல்லி, பிப்.13-

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகளுக்கு ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டிய நிதி தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு, தன்னுடைய நிர்வாகப்பிழையை மறைக்க தமிழ்நாடு அரசின் மேல் பழிசுமத்தி, நிதி வழங்க ஒன்றிய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது. இதன் வாயிலாக, தர்மபுரி உள்ளிட்ட மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான மக்களின் தாகம் தீர்க்கும் முக்கியமான திட்டத்தை முடக்குவதற்கு ஒன்றிய அரசு செய்யும் திட்டமிட்ட சதி அம்பலமாகியுள்ளது.

**1. தமிழ்நாட்டின் கோரிக்கையை உதாசீனப்படுத்தும் போக்கு:**

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டம். 2008-ஆம் ஆண்டு அவர் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டு, அப்போது உள்ளாட்சித்துறை அமைச்சராக பொறுப்பு வகித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜப்பான் சென்று நிதி உதவி பெற்று பணிகளைத் தொடங்கினார்கள். 2011-ஆம் ஆண்டு கழக ஆட்சியின் நிறைவில், பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டன.

இந்த நிலையில், 2021-ஆம் ஆண்டு ஆட்சித்தலைமையேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தை மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் நோக்கில் இரண்டாம் கட்டத்தை அறிவித்து நடைமுறைப்படுத்தினார்கள். இதற்குப் பிறகு, 8,428.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்றாம் கட்டத்தையும் அறிவித்தார்கள்.

ஆனால், இந்த மூன்றாம் கட்டத்திற்கு ஜல்ஜீவன் திட்டத்தின் சார்பாக விடுவிக்க வேண்டிய நிதியை விடுவிக்காமல் இதுவரை தாமதப்படுத்தி வருகிறது ஒன்றிய அரசு. மாநில நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அளித்த தரவின் படி, 2283 கோடி ரூபாய் இதற்கென்று வர வேண்டும்.

தமிழ்நாடு அரசின் சார்பில் பல முறை கோரிக்கை வைக்கப்பட்டும், இது தொடர்பாக ஒரு சிறிய அக்கறையைக் கூட ஒன்றிய அரசு காட்டாமல் தவிர்ப்பது, தமிழ்நாட்டையும், அதன் மக்களையும் உதாசீனப்படுத்தும் போக்கே.

**2. திட்ட அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பித்தும் முட்டுக்கட்டை:**

ஒன்றிய அரசு தற்போது அளித்துள்ள பதிலில், “ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கான திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசு சரியான நேரத்திற்கு அளிக்கவில்லை” என்று கூறியுள்ளது. இது அப்பட்டமான பொய் என்பதற்கு, ஜல்ஜீவன் திட்டத்தை சிறப்பாக அமல்படுத்தி வரும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்வதே ஆதாரம்.

நடந்தது இது தான். தமிழ்நாடு அரசு அத்தனை ஆய்வுகளையும் சரியாக செய்து, ஜல்ஜீவன் திட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட கெடு முடிவதற்கு முன்பே, திட்ட அறிக்கையை ஒன்றிய அரசிடம் சமர்ப்பித்துவிட்டது. ஆனால், ஒன்றிய அரசு தனது இணையதளத்தில் அதை விரைந்து பதிவேற்றாமல் வீணாக காலத்தை கழித்தது.

இப்போது வந்து, தமிழ்நாடு அரசின் மீது பழிபோடுவது தன்னுடைய நிர்வாகப்பிழையை மக்களின் முன்னால் மறைக்க ஒன்றிய அரசு ஆடும் நாடகமே.

**3. புதிய பட்ஜெட் அறிவிப்பிற்குப் பிறகும் நிதி வழங்கும் அறிகுறி இல்லை:**

சமீபத்திய பட்ஜெட்டில் ஜல்ஜீவன் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு 2028 வரை தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், தற்போது கிடைத்துள்ள பதில்களில் இருந்து, இந்த பட்ஜெட்டிற்குப் பிறகும் ஒகேனக்கல் திட்டத்திற்கு நிதி வழங்குவது குறித்து ஒன்றிய அரசு எந்த அறிகுறியும் வெளிப்படுத்தவில்லை.

முன்பு தான் கெடுமுடிந்துவிட்டது என்று சொல்லப்பட்டுவிட்டது. ஆனால், இப்போது அந்த நிதியை விடுவிக்க என்ன தயக்கம்? எது தடுக்கிறது? இது மூலம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தையே முழுவதுமாக முடக்குவதற்கு ஒன்றிய அரசு சதி செய்து வருவது அம்பலமாகியுள்ளது.

தன்னுடைய நிர்வாகப் பிழையை தமிழ்நாடு அரசின் மேல் சுமத்தி தப்பிக்கப் பார்க்கும் ஒன்றிய அரசின் செயலை ஏற்க முடியாது. ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தை முடக்குவதற்கு சதிசெய்வதை நிறுத்திவிட்டு, மூன்றாம் கட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### சூர்யா கிருஷ்ணமூர்த்தி, – சேலம் சுஜாதா சிறப்புரை !

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறை’ கூட்டம்!

## மாவட்ட கழகப் பொறுப்பாளர் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை!



திருவள்ளூர் பிப்.13-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் திமுக சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறை கூட்டம் நாளை 14.02.2026 அன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் A.A.M. பேலஸ் வேம்பாக்கம் பொன்னேரியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்பி சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு. நாசர் ஆலோசனைப்படி மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் எனது தலைமையில் நடைபெறுகிறது மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மு.கதிரவன், எம்எல் ரவி, எஸ். ரமேஷ் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி.வேணுஆனந்த், மு. மணிபாலன், ஆ.சத்தியவேலு, நா.செல்வசேகரன் மு.ஜான்(எ) பொன்னுசாமி, ந.பரிமளம் மு.முரளிதரன், வே.ஆனந்தகுமார், ஏ.ஆர்.டி.உதயசூரியன், கா.சு.ஜெகதீசன், இரா.அறிவழகன், பி.முத்து, க.சு.தமிழ்உதயன், முன்னிலை வகிக்கிறார்கள் மீஞ்சூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆ.ராஜா, கும்மிடிப்பூண்டி தொகுதி வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பொறுப்பாளர் அபிராமி குமரவேல், பொன்னேரி தொகுதி வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பொறுப்பாளர் ராஜராஜேஸ்வரி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கலந்து கொண்டு பாசறைப் பயிற்சி வழங்குகிறார்கள் இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டிஜே.கோவிந்தராஜன் எம்எல்ஏ, இ.ஏ.. பி.சிவாஜி, ஜெ. மூர்த்தி, மாநில நிர்வாகிகள் சி. எச்.சேகர், கவி கணேசன், சுரேஷ் செல்வராஜ், பாஸ்கர் சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ. கே. சுரேஷ், ராபர்ட் ராஜதுரை, பொதுக் குழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, வெங்கடாஜலபதி, பரிமளம் விஸ்வநாதன் கலந்து கொள்கிறார்கள் எனவே மாவட்ட மகளிர் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக மகளிர் அணி சார்ந்த நிர்வாகிகள் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் நிகழ்ச்சி முடிவில் கலைச்செல்வி சிவகாமி நன்றி கூறுகிறார்கள், என மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம். எஸ். கே. ரமேஷ் ராஜ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துக் கொண்டார் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் இரா. அருணகிரி

பிப்ரவரி 13 (2005)



நாமக்கல் நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும் பின்னர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இரு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், நாமக்கல் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைப்புக்குழு துணைத் தலைவராகவும், மாநில கூட்டுறவு இணையத்தின் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.